### பன்முக ஆற்றல் கொண்ட ஒப்பற்ற தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில்

# கும்பகோணத்தில் பல்கலைக் கழகம் என்ற அறிவிப்பினை வெளியிட்ட முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் – உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் உணர்ச்சிமிகு உரை!



சென்னை, ஏப். 26 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் உரையாற்றிய உயர் கல்வித் துறை அமைச்சர் - முனைவர் கோவி.செழியன், 'பன்முக ஆற்றல் கொண்ட ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் கும்ப கோணத்தில் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்!'' என்று உருக்கமுடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் - அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது :-

முத்தமிழறிஞர்; மூதறிஞர்; அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கையை முதல் வரிசைத் தலைவர்கள் வலியுறுத்தி, முதலமைச்சர் அவர்கள் கும்பகோணத்தில் அது அமையப் பெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டதற்கு உயர் கல்வித் துறை சார்பிலும், அந்த மண்ணின் தொண்டன் என்ற முறையிலும் மனமார்ந்த நன்றிகளை கோடிக்கணக்கான முறையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**வரலாறாக வாழ்ந்த கலைஞர்!**

பொதுவாக தலைவர்கள் வரலாறு படைப்பார்கள். ஆனால், வரலாறாகவே வாழ்ந்த ஒரு தலைவர் உண்டு என்றால், அது முத்தமிழறிஞர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிப் படிப்பை தாண்டாமலேயே பல்கலைக்கழகங்களுக்கு பாடமானவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவரது மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று Ph.D. மாணவர்களுக்கு ஆய்வு நூலாக விளங்குகிறது.

மேடையில் பல தலைவர்கள் பேசுவார்கள். மேடை உண்டு; தலைவர்கள் உண்டு; ஒலிவாங்கி உண்டு. ஆனால், 'உடன்பிறப்பே' என்ற ஒற்றைச் சொல்லில் பல கோடிக்கணக்கான தொண்டர்களின் கரவொலியினைப் பெற்ற ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர், மூதறிஞர் கலைஞர் அவர்கள். குறளுக்கு குறளோவியம், கரடு முரடான தொல்காப்பியத்திற்கு தொல்காப்பிய பூங்கா எழுதிய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

படத்தின் கதாநாயகன் யார்? படத் தயாரிப்பு கம்பெனி எது? என்று பார்த்து, படம் பார்க்க போவார்கள். படத்தின் கதாசிரியர் யாரென்று படம் பார்த்த காலம் கலைஞருடைய காலம். (மேசையைத் தட்டும் ஒலி) படத்தின் தலைப்பே வித்தியாசமாக இருக்கும். பாடாத தேனீக்கள், பாலைவன ரோஜாக்கள், மாடிவீட்டு ஏழை, நீதிக்குத் தண்டனை என வார்த்தையிலே ஒரு கதையைச் சொல்ல முடியும் என்ற கதாசிரியர் கலைஞர் என்ற கம்பீரத் தலைவர் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இதே அவையில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எவ்வளவு பேர் இருந்தாலும், அவர் மறைந்தாலும் ஒரு நாளைக்கு 24 மணிநேரம் உறங்குகின்ற நேரம்போக, அவருடைய நினைவு இல்லாத ஒரு தமிழன் இன்று தமிழுலகில் இல்லை என்று சொல்லக்கூடிய வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுமை கொண்ட தலைவர். ஒருவேளை கலைஞர் நினைவில்லாமல் ஒரு மனிதனுக்கு ஒரு நாள் கடக்குமேயானால், அவர்கள் தமிழர்களா? என்ற எண்ணத்தைக்கூட உருவாக்கக்கூடிய ஆளுமையுடைய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

1957 ஆம் ஆண்டு முதல் தன்னுடைய ஆயுட்காலம் உள்ளவரை 234 பேர்கள் உட்காருகின்ற இந்தச் சபையில் தனக்கென ஒரு தனி நாற்காலியை தக்க வைத்துக் கொண்ட ஒப்பற்றத் தலைவர் கலைஞர் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பன்முக ஆற்றல்கொண்ட அந்த ஒப்பற்றத் தலைவருக்கு கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அறிவிப்பினை வெளியிட்ட முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை, நன்றிகளை, நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

### பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான விடுதியில்

# மாணவர்களுக்கான விடுதி உணவுப்படி உயர்வு!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தகவல்!



சென்னை, ஏப். 26- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான விடுதியில், மாணவர்களுக்கான விடுதி உணவுப் படியை முதல்வர் அவர்கள் உயர்த்தி வழங்கி இருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்த விவாதம் வருமாறு:-

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம் மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா? என்று உறுப்பினர் சு.ரவி கேட்ட கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அளித்த பதில் வருமாறு:-

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, அரக்கோணம் ஒன்றியத்திலுள்ள வளர்புரம் சுற்றியுள்ள பகுதியிலே மூன்று மாணவர் விடுதிகளும், இரண்டு மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருவதால் வளர்புரம் பகுதியில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக பள்ளி மாணவர் விடுதி துவங்க அவசியம் எழவில்லை.

அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வளர்புரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 456 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இதிலே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை 171 ஆகும். அரக்கோணம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதியில் 2022 ஆம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கையில்லாமல், விடுதி செயல்படாமல் உள்ளது. அதேபோல வளர்புரம் பகுதியிலே ஓர் ஆதி திராவிடர் மாணவர் விடுதியானது ஒன்பது மாணவர்கள் சேர்க்கையுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் வளர்புரம் பகுதியிலே பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். துறையினுடைய அதிகாரிகளை அங்கு அனுப்பி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று பரிசீலிக்கப்படும்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு, பள்ளி மாணவர்களுக்கான விடுதி உணவுப் படியினை ரூ.1,000/-லிருந்து ரூ.1,400/-ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கான விடுதி உணவுப் படியினை ரூ.1,100/-லிருந்து ரூ.1,500/- ஆக உயர்த்தி தந்த முதலமைச்சர், முதலமைச்சர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதியிலிருக்கின்ற கல்லூரி விடுதிகளில் பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அது நிறைவேற்றப்படும். அதேமாதிரி மாணவிகளுக்கு இலவச SANITARY NAPKIN வழங்குகின்ற திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது; எங்கும் நிறுத்தப்படவில்லை. அதேமாதிரி, இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலிருக்கின்ற மாணவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து விடுதிகளிலும், முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கிட்டத்தட்ட 634 விடுதிகள் மராமத்து செய்யப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அனைத்து விடுதிகளிலும் மின்சார தட்டுப்பாடு ஏற்படுகிறபோது, அனைத்து விடுதிகளிலும் INVERTER பொருத்தப்பட்டுள்ளது தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### கடலூர் தொகுதியில்

# மலட்டாற்றை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்துக!

## சட்டப்பேரவையில் – கடலூர் கோ.ஐயப்பன் கோரிக்கை!



சென்னை, ஏப்.26- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது கடலூர் தொகுதி உறுப்பினர் கோ.ஐயப்பன் மலட்டாற்றை ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கோ.ஐயப்பன்:** கடலூர் தொகுதியிலுள்ள மலட்டாற்றை ஆழப்படுத்தவும் அதன் கரைகளைப் பலப்படுத்தவும் அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** கடலூர் தொகுதியில் உள்ள மலட்டாற்றின் கரைகளை பலப்படுத்தி ஆழப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். கடலூர் தொகுதியில் உள்ள தென்னம்பாக்கம் கிராமம் முதல் மதலப்பட்டு கிராமம் வரை வட மலட்டாறு ஆற்றின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் வட மலட்டாற்றின் படுகையில் உள்ள மண்திட்டுகளை அகற்றுதல் ஆகிய பணிகளை நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

கோ. ஐயப்பன்: நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்தின் நிலையை அறியாதவர் அல்ல. இருந்தபோதிலும் முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் அரசு விழாவிற்கு கடலூர் வந்தபோது பெண்ணையாற்றின் கரைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, சீர்படுத்துவதற்காக CONCRETE அமைப்பதற்காக அரசு விழா மேடையிலே 57 கோடி ரூபாய் அறிவித்து பெண்ணையாற்றின் கரைகளை பலப்படுத்துங்கள் என்று உத்தரவிட்டு, அது திட்ட மதிப்பீடுகள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வருவதற்கு தயாராக இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று மழை எங்கே பெய்தாலும் எங்களுக்கு ஆறுகள் சங்கமிக்கின்ற முகத்துவாரங்கள் கடலில் கலக்கின்ற நிலை கடலூரில் இருக்கின்ற காரணத்தால் எங்கள் பகுதிக்கு வரும்போது ஆற்றின் கரைகள் முழுவதும் வெள்ளம் வந்து கரைகள் உடைந்து, ஊருக்குள் புகுந்து பல்வேறு நிலைகளில் ஏழை மக்களை துன்புறுத்துகின்றது. பெஞ்ஜால் புயலிலே திடீரென இரவு 11 மணிக்கு வந்த வெள்ளத்தின் காரணமாக பெண்கள் எல்லாம் வெறும் புடவையோடும், ஆண்கள் எல்லாம் வேட்டி, சட்டையோடு வெளியில் வந்து பல்வேறு சிரமங்களுக்கு, பல இலட்சம் பொருட்கள் வீணடிக்கின்ற நிலையை ஆற்று வெள்ளம் ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் இதை கடந்த ஆண்டுகூட நான் கேட்ட போது, பல்வேறு பணிகளுக்கு நியாயமான பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையிலே இதையும் செய்து தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** பொதுவாக அவருடைய தொகுதியில் சாந்தகுப்பம் கிராமத்தில் கொண்டங்கி ஏரியை சீர்படுத்துவதற்காக ரூ. 1.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரியகங்கணாங்குப்பத்திலே பெண்ணையாற்றின் வலது கரை தடுப்புக்காக ரூ.6.30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வேலை நடக்கிறது. மலட்டாற்றின் கீழ்மங்கலம் அணைக்கட்டின் மருகூர் கிராமத்தில் அதை புனரமைப்பதற்காக ரூ.2.2 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மஞ்சகுப்பம் குண்டுஉப்பலவாடி நகரம் முதல் கிராமம் வரை மேற்கோள்ளப்படவுள்ள பணிகளுக்காக ரூ.9.9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், பெஞ்ஜால் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் வட மலட்டாற்றின் கரைகளின் மேல் வடிந்து கரைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இந்தக் கரைகளை, உடைப்புகளை சரி செய்வதற்காக உடனடியாக நிரந்தர வெள்ளத் தடுப்பிற்காக செய்ய 7 கோடி ரூபாயாக திட்டமிட்டு, அதற்காக அரசு நடவடிக்கை எடுக்கிறது.

**கோ. ஐயப்பன்:** நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு இதே மன்றத்திலே நான் கேள்வி கேட்கின்றபோது நல்லவர் ஆட்சியிலே மழை வரும், அதிகமாக வெள்ளம் வரும். அதை பொறுமையாகத்தான் சீர் செய்யப்படும் படிப்படியாகத்தான் சீர்செய்யப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அந்த வகையில் நல்லவர் ஆட்சியிலே மேலும் மேலும் மழை பெய்து கொண்டிருக்கின்றது. தாங்கள் அருள்கூர்ந்து மலட்டாற்றின் கரைகளை சீர் செய்து தருமாறும் அதேபோன்று பெண்ணையாற்றிலே ஒரெயாரு தடுப்பணைதான் நான் கேட்டிருக்கின்றேன்.

அமைச்சர் அவர்கள் அழகியநத்தம் வெள்ளக் கரை பகுதியிலே வெள்ளப்பாக்கம் அழகியநத்தம் பகுதியிலே ஒரு தடுப்பணை அமைத்து எங்கள் கடலூர் தொகுதி மக்களை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** காப்பாற்றப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### நாமக்கல் கல்லூரி மகளிருக்கான

# விடுதிக் கட்டிடம் புதிதாகக் கட்டிடுவீர்!

## சட்டப் பேரவையில் – பெ.ராமலிங்கம் கோரிக்கை!



சென்னை, ஏப். 26- சட்டப் பேரவையில் நாமக்கல் தொகுதி உறுப்பினர் பெ.ராமலிங்கம் கேட்ட கேள்வியும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அளித்த பதிலும் வருமாறு:-

**ராமலிங்கம்:** நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் சுமார் 4,000 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அதில் சுமார் 750 மாணவிகள் தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து, இங்கு தங்கி பயின்று வருகிறார்கள். 2023-2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் நான் வைத்த கோரிக்கையை ஏற்று, மிக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக ஒரு மாணவியர் விடுதி அறிவிக்கப்பட்டது. சுமார் 150 மாணவிகள் இப்போது அங்கு கல்லூரியில் இருக்கின்ற வகுப்பறைகளில் தங்கி பயின்று வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு இந்த ஆண்டு தனியாக விடுதிக் கட்டடம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

ஏற்கெனவே கடிதம்மூலம் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:** நாமக்கல் கல்லூரி மாணவியர் விடுதியானது, அந்த கல்லூரி வளாகத்திலே செயல்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, நாமக்கல் கல்லூரி மாணவியர் விடுதிக்கு விரைவில் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் –

# அழகாபுரம் கிராமத்தில் மாணவர் விடுதி அமைத்திடுவீர்!

## பேரவையில் – க.சொ.க.கண்ணன் கோரிக்கை!



சென்னை, ஏப். 26- பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் க.சொ.க.கண்ணன் கேட்ட கேள்வியும், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அளித்த பதிலும் வருமாறு:-

**க.சொ.க. கண்ணன்:** எனது ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், அழகாபுரம் கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மிகவும் பின்தங்கிய கிராமங்கள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது. இங்கே படிக்கக்கூடிய மாணவர்கள் விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுடைய பிள்ளைகள் படிக்கிறார்கள். நீண்ட காலமாக அங்கே விடுதி வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. எனவே, அழகாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவரா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:** ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழகாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நிதிநிலை மைக்கேற்ப, தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உறுப்பினர் அவர்களுடைய ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட அந்த பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தொடங்குவதற்கு நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை தங்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.


இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சிக்கல் பொ. கணபதி

### ஏப்ரல் 26 (1996)



நாகை மாவட்டம், சிக்கல் கிளைச் செயலாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு ஆகிய பொறுப்புகளில் பணியாற்றியவர்.

சிக்கல் ஊராட்சி மன்றத்திற்கு ஐந்துமுறை போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாகை ஒன்றியப் பெருந்தலைவராகவும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் இயக்குநர்களில் ஒருவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சிறைவாசத்தில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா குமரன் (எ) குமாரசாமி

### ஏப்ரல் 26 (2024)



தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி, மயிலாடுதுறை சுற்றுப் பகுதியில் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி கால மிசா சட்டம் நடைமுறையில் இருந்தபோது, சீர்காழிக்கு வந்த முத்தமிழறிஞர் கலைஞரை தைரியமாக தனது வீட்டிற்கு அழைத்து உணவளித்தார். இதன் காரணமாக 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

சீர்காழி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை, குத்தாலம் ஆகிய வட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு "புரவலர் நிதி" வழங்கி கல்வி வளரப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**